திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரத்தில் நீண்ட காலமாக ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் இல்லாமல் பொது மக்கள் அவதிப்படுவதைக் குறித்து பலமுறை இந்த அவையில் பதிவு செய்தும், அந்தப் பணி இன்றுவரை தொடங்கப்படவேயில்லை. எனவே, பொது மக்களின் நலன் கருதி, இந்த நிதியாண்டிலேயே ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(அஔ) விளாத்திகுளம் தொகுதி, புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.*

திரு. P. சின்னப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

'தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடு வோம்
புது சரித்திரம் படைத்திடுவோம்'

என்று முழங்கிய மகாகவி பாரதியாரின் பெயரில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனி வட்டம் அமைத்தார்கள். அந்தப் பகுதியிலே ஊராட்சி ஒன்றியம் இல்லை. அந்தப் பகுதி, விளாத்திகுளம், புதூர் மற்றும் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய பகுதியாக உள்ளது. அங்கே தனியாக ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைத்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.

(ஆஅ) செங்கல்பட்டு தொகுதி, மதுராந்தகம் ஏரியைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியிலே படிக்கிற காலத்தில், ஏரிகள் மாவட்டம் என்றால் எந்த மாவட்டம் என்று ஒரு கேள்வி வரும். அதற்கு நாம் செங்கல்பட்டு மாவட்டம் என்று விடைத்தாளில் பதில் எழுதியிருக்கிறோம். அந்த ஏரிகள் நிறைந்த மாவட்டத்தில், என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் இருக்கக்கூடிய மதுராந்தகம் ஏரி, மிகவும் பரந்து விரிந்த ஏரி. இந்த ஏரியினுடைய பாசனத்தை நம்பி கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கடந்த ஆண்டு, தண்ணீர் இல்லாத காரணத்தால், ஆயிரம் ஏக்கர் பயிர் கருகிவிட்டது. எஞ்சிய 4 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்ய முடியவில்லை. மிகவும் பரந்து விரிந்த மதுராந்தகம் ஏரியைத் தூர்வார வேண்டுமென்று அரசை தயைகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். கடந்த 16–6–2017 அன்று எனது கன்னிப் பேச்சின்போது இதே கோரிக்கையை வைத்தேன். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே தூர்வாரப்படும் என்று இந்த மன்றத்திலே ஓர் உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள். ஆனால், இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. எனவே, தயவுகூர்ந்து, மதுராந்தகம் ஏரியைத் தூர்வாரி, விவசாயிகளின் வயிற்றிலே பால் வார்க்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வணக்கம்.

(ஆஆ) பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் குறித்த தெளிவான சுற்றறிக்கை அனுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

***திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் plastic பொருட்களின் உபயோகம் தடை செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது. அது வரவேற்கத்தக்கது. ஆனால், இப்போதும் Lays chips, plastic cover–ல்தான் வருகிறது. Plastic tumbler தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இப்போதும் TATA company–யின் ஒரு குளிர்பானம் plastic tumbler–ல் seal போடப்பட்டு வருகிறது. அதேபோல், plastic straw தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், Frooti juice, plastic straw–வுடன்தான் வருகிறது. ஆகவே, நம்முடைய அரசு, அரசு அதிகாரிகள் உட்பட பொது மக்களுக்கும்,